155

155

Silent Reading Series

(IN TAMIL)

BOOK 1

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JAN 1943
MADRAS

BY

M. S. SUNDARESWARAN, M.A., L.T.

Coimbatore.

2125

THE NATIONAL PUBLISHING Co.,

12, SECOND LINE BEACH, MADRAS.

Price As. 3,

மௌன வாசிப்பு வரிசை

முதற் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JAN 1943
MADRAS

ஆசிரியர் :

M. S. சுந்தரேசுவரன், M.A., L.T.,

894·8113

2175

நாஷனல் பப்ளிஷிங் கம்பெனி,

12, சகண்டு லேன் பீச்சு, சென்னை.

பதிப்புரிமை] [விலை அணா 3.

முதற்பதிப்பு, 1941.
இரண்டாம்பதிப்பு, 1942.

031,3

Approved by the Text-Book Committee, Madras for Class Libraries:
Vide Fort St. George Gazette Part I B Page 94 of the Consolidated List of approved books for 1942, dated June 2, 1942.

The B. N. Press, Madras.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JAN 1943
MADRAS

முன்னுரை

தாய் மொழிப் பயிற்சியில் வாசிப்பு முக்கியமான பாக மாகும். வாசிப்பு, வாய் விட்டு வாசித்தல், மௌன வாசிப்பு என இரு வகைப்படும். வாழ்க்கையில் மக்களுக்கு அதிகமாகப் பயன்படுவது மௌன வாசிப்பே. ஐந்தாம் வகுப்பு முடிக்கும் முன்பே, மற்றப் பாடங்களுக்குரிய புத்தகங்களைப் படித்து விஷயங்களை அறிய, குழந்தைக்கு மௌன வாசிப்பு அவசிய மாகிறது. இப்படியிருந்தும், நம் பாடசாலைகளில் மௌன வாசிப்பு வெகு காலமாகக் கவனிக்கப்படாமலே இருந்து வந்தது. கலவி இலாக்காவில் சமீபத்தில் வெளியிட்ட பாடத் திட்டத்தால் இக்குறை நீங்க இடம் ஏற்பட்டது.

வாய் விட்டு வாசிப்பதற்கும் மௌன வாசிப்புக்கும் அவசியமாகும் பழக்கங்கள் வேறு. ஆகவேதான், வாய் விட்டு வாசிப்பதோடு மௌனமாக வாசிப்பதிலும் முதலிலிருந்தே பயிற்சி செய்விக்க வேண்டுமென வற்புறுத்தப்படுகிறது. முதல் வகுப்பில் மௌன வாசிப்பு சிறிதளவேதான் சாத்தியமாகும். இரண்டாம் வகுப்பில் அதன் விகிதம் 40 சத வீதம் இருக்க வேண்டும். மூன்றும் வகுப்பில் இந்த விகிதம் 60 சத வீதமாக உயர்ந்து, படிப்படியாக அதிகரித்துக்கொண்டே போக வேண்டும். ஆகவேதான், மூன்றும் வகுப்பிலிருந்து மௌன வாசிப்புக்கெனத் தனிப் புத்தகங்கள் அவசியமாகின்றன.

தாய்மொழிப் பயிற்சியில் கதைகள் முக்கியமானவை யாகும். கதை சொல்லவும், கதை கேட்கவும், கதை படிக்கவும் குழநதைகள் ஆவலுள்ளவர்களாயிருப்பார்கள். ஆகவே,

மௌன வாசிப்புக்கென எழுதிய இப்புத்தகங்களில் கதைகளே பெரும்பாலும் சேர்க்கப்பட்டுள்ளன.

மௌன வாசிப்புப் பயிற்சி பயனளிக்க வேண்டுமாயின், அதற்கான புத்தகங்களைச் சாதாரண வாசகபுத்தகங்களை வகுப்பில் நடத்துவதுபோல நடத்தலாகாது. குழந்தைகள் தாங்களே, அவற்றைப் படிக்கவேண்டும். வாசிப்பில் வேகம், உச்சரிப்பின்மை, உதடு அசையாதிருத்தல், பொருளறிதல் ஆகிய இலட்சணங்கள் இவ்வாசிப்புக்கு வேண்டியவை. இவை ஒரே நாளில் கிட்டமாட்டா; தொடர்ந்த முயற்சியாலும் பழக்கத்தாலுந்தான் ஏற்படும். மூன்றும் வகுப்பில் பொருளறிவதோடு, வேகமும், உச்சரிப்பை ஓரளவுக்குக் குறைத்தலும் நோக்கமாக இருக்க வேண்டும். நான்காம் வகுப்பில் உச்சரிப்பின்மையும் குறைவடைந்த உதடு அசைதலும் உண்டாக வேண்டும். ஐந்தாம் வகுப்பில் மௌன வாசிப்பின் இலட்சணங்கள் அனைத்தும் முழுதும் கிட்ட வேண்டும்.

ஒவ்வொரு கதையின் கீழும் விஷய ஞானத்தைச் சோதிக்கக் கேள்விகளும் பயிற்சிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு விடைகளைக் குழந்தைகளிடம் பெறுவதோடு, அவர்களையே கதையைச் சொல்லவும், நடிக்கவும், வேறு விதமாக முடித்துச் சொல்லவும் பழக்குவது நலம் பயப்பதாகும்.

கோயமுத்தூர், 9—12—1940 } M. S. சுந்தரேசுவரன்,

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	தாய் சொல் கேளாத குஞ்சுகள்	...	7
2.	பூனையும் சுண்டெலியும்	...	10
3.	கிழப் பூனை	...	13
4.	கிணற்றில் விழுந்த பூனைக்குட்டி	...	15
5.	சிங்கமும் சுண்டெலியும்	...	18
6.	யார் உயர்ந்தவர் ?	...	21
7.	ஓநாயும் குழி முயலும்	...	24
8.	கர்வத்தால் இறந்த கழுதை	...	27
9.	ஒற்றுமையே பலம்.	...	29
10.	சேவலும் நரியும்	...	32
11.	சுண்டெலிகளின் கூட்டம்	...	35
12.	நாயும் பூனையும்	...	39
13.	கபடமுள்ள சினேகம்	...	41
14.	அரசமரமும் நாணலும்	...	44
15.	அரசனும் கிழவனும்	...	47

மௌன வாசிப்பு வரிசை

(முதற்புத்தகம்)

1. தாய் சொல் கேளாத குஞ்சுகள்



1. ஒரு கோழிக்கு நான்கு குஞ்சுகள் இருந்தன. அவை சிறியவை. ஆகையால், தாய்க்கோழி வெளியே போய் அவைகளுக்கு இரை தேடி வரும்.

2. "என் கண் மணிகளே, நான் இரைக்காக வெளியே போய் வருகிறேன், நீங்கள் வீட்டிலேயே

இருங்கள். வெளியே போனால், பருந்து உங்களைத் தூக்கிக்கொண்டு போய்விடும்," என்று சொல்லி விட்டுத் தாய்க்கோழி இரை தேடப் போயிற்று.

3. "ஆஹா! வெளியே எவ்வளவு அழகாய் இருக்கிறது! நாம் சற்று நேரம் போய் விளையாடி விட்டு வரலாமே! பருந்து வந்தால், ஓடிவந்துவிட லாம்," என்று குஞ்சுகள் பேசிக்கொண்டன.



4. நான்கு குஞ்சுகளும் சந்தோஷமாய் வெளியே போயின. அவை விளையாடும்போது, பருந்து ஒன்று பறந்து வந்து, ஒரு குஞ்சைத் தூக் கிக்கொண்டு போயிற்று. மற்ற மூன்று குஞ்சுக ளும் பயந்து வீட்டுக்கு ஓடின.

5. தாய்க்கோழி வீடு திரும்பியது. குஞ்சுகள் விசனமாய் இருந்தன. கோழி நடந்ததை அறிந்து கொண்டது.

6. "நீங்கள் தாய் சொல் கேளாததால் அல்லவா இந்த ஆபத்து நேர்ந்தது?" என்று தாய்க் கோழி சொல்லிற்று.

7. குஞ்சுகள் மூன்றும் தலைகுனிந்து நின்றன. அன்று முதல் அவை தாய் சொல்லுக்கு அடங்கி நடந்தன.

பயிற்சி :

1. குஞ்சுகளை வெளியே போகவேண்டா என்று தாய் ஏன் சொல்லிற்று ?
2. குஞ்சுகள் என்ன எண்ணிக்கொண்டு வெளியே போயின ?
3. குஞ்சுகள் ஏன் விசனமாய் இருந்தன ?
4. அவை ஏன் தலை குனிந்து நின்றன ?
5. இந்தக் கதையைக் கோழி சொல்லுவது போலச் சொல்லு.

2. பூனையும் சுண்டெலியும்



1. ஒரு நாள் ஒரு பூனை ஒரு சுண்டெலியைப் பிடித்தது. பூனை அதைக் கொல்லவில்லை. அதை விடும்; அது ஓடும்போது மறுபடியும் அதைப் பிடிக்கும். இம்மாதிரி பூனை சுண்டெலியைத் தொந்தரவு செய்தது.

2. "ஐயா, பூனையாரே, என்னை ஏன் இப்படித் தொந்தரவு செய்கிறீர்? என்னை விட்டுவிடும்," என்று சுண்டெலி கெஞ்சிக் கேட்டது.

3. "தொந்தரவா! எனக்கு இது விளையாட்டாய் இருக்கிறதே!" என்று பூனை சொன்னது.

4. அப்போது அங்கு ஒரு நாய் வந்தது. நாய்க்குப் பயந்து பூனை அருகிலிருந்த சுவரின்மேல் ஏறிக்கொண்டது. சுண்டெலி ஓடி வளைக்குள் புகுந்து பார்த்துக்கொண்டே இருந்தது.

5. நாய் அந்த இடத்திலிருந்து போக ஆரம்பித்தது. அதைக் கண்ட பூனை கீழே குதிக்கப் பார்த்தது. நாய் திரும்பிப் பூனையைத் துரத்த முயன்றது. ஆகையால், பூனை கீழே இறங்க முடியவில்லை. இம்மாதிரியே நாய் பூனையைத் தொந்தரவு செய்தது.



6. "ஐயா, நாயாரே, நீர் என்னை ஏன் தொந்தரவு செய்கிறீர்? நீர் உம் வழியே போகலாகாதா?" என்று பூனை கேட்டது.

7. "தொந்தரவா! எனக்கு இது எவ்வளவு விளையாட்டாய் இருக்கிறது!" என்று நாய் பதில் சொன்னது.

8. "ஐயா, பூனையாரே, எனக்கும் அப்படித் தானே இருந்திருக்கும்? இப்போதாவது அது உமக்குத் தெரிகிறதா?" என்று சுண்டெலி பூனையைக் கேட்டது.

9. அன்று முதல் பூனை மற்றவைகளைத் தொந்தரவு செய்வதை விட்டுவிட்டது.

பயிற்சி :

1. பூனை சுண்டெலியை எப்படித் தொந்தரவு செய்தது?
2. பூனைக்கு அப்படிச் செய்தது எப்படி இருந்தது?
3. நாய் பூனையை எப்படித் தொந்தரவு செய்தது?
4. பூனை அதனால் என்ன தெரிந்துகொண்டது?
5. இந்தக் கதையைச் சுண்டெலி சொல்லுவது போலச் சொல்லு.

3. கிழப்பூனை



1. ஓர் ஊரில் ஒரு கிழவி இருந்தாள். அவள் ஒரு பூனையை வளர்த்து வந்தாள். அந்தப் பூனை வீட்டிலுள்ள எலிகளைப் பிடித்துக் கொன்றுவிடும். அதனால், கிழவி பூனையினிடம் அன்பாய் இருந்தாள்.

2. பல நாட்கள் ஆயின. பூனை கிழமாகி விட்டது. அதன் பற்கள் விழுந்து போயின. ஓடுவதற்கும் அதற்குப் பலம் இல்லை.

3. ஒரு நாள் பூனை ஓர் எலியைப் பிடித்தது. பூனையின் பற்கள் விழுந்துவிட்டதால், அதனால் எலியைக் கடித்துக் கொல்ல முடியவில்லை. எலி பூனையின் வாயிலிருந்து நழுவி ஓடிவிட்டது.

4. "இவ்வளவுதானா உன் வேலை! இனி நீ என்னை விட்டு ஓடிப்போ," என்று சொல்லிக் கிழவி பூனையை அடித்துத் துரத்தினாள்.

5. "அம்மா, நான் இத்தனை நாட்களாகச் செய்த உபகாரத்தை எல்லாம் நீ மறந்துவிட்டாயே! தள்ளாத காலத்தில் என்னை அடித்துத் துரத்தலாமா?" என்று பூனை கேட்டது.



6. இதைக் கேட்ட கிழவி, தான் செய்தது தவறு என்பதை அறிந்தாள்; பூனையைத் தடவிக் கொடுத்துத் தன்னிடம் வைத்துக்கொண்டு காப்பாற்றினாள்.

பயிற்சி :

1. கிழவி பூனையிடம் ஏன் அன்பாய் இருந்தாள்?
2. தான் பிடித்த எலியை ஏன் பூனையினால் கொல்ல முடியவில்லை?
3. கிழவி பூனையை ஏன் அடித்துத் துரத்தினாள்?
4. அவள் செய்தது ஏன் தவறு?
5. இந்தக் கதையைப் பூனை சொல்லுவது போலச் சொல்லு.

4. கிணற்றில் விழுந்த பூனைக்குட்டி



1. ஒரு நாள் ஒரு பூனைக்குட்டி தன் தாய்க்குத் தெரியாமல் வெளியே ஓடிப் போயிற்று. அது தோட்டத்தில் ஓடுகையில் வழியிலிருந்த கிணற்றைத் தாண்டியது. அப்போது அது கிணற்றில் விழுந்துவிட்டது; கிணற்றின் சுவரில் தொத்திக் கொண்டு, "மியா, மியா," என்று கத்திற்று.

2. தன் குட்டியைக் காணாத தாய் அதைத் தேடிக்கொண்டு கிணற்றண்டை வந்தது; குட்டியின் சத்தம் கேட்டுக் கிணற்றுக்குள் பார்த்தது; அங்குப் பூனைக்குட்டி உயிருடன் இருப்பதைக் கண்டது; அதை எப்படி வெளியே எடுப்பது என்று தெரியாமல் ஏங்கி நின்றது.

3. அச்சமயம் அவ்வழியே சில சிறுவர்கள் வந்தார்கள் ; கிணற்றண்டை பூனை இருப்பதையும் கிணற்றிலிருந்து குட்டியின் சத்தம் வருவதையும் அறிந்தார்கள் ; கிணற்றுக்குள் குட்டி இருப்பதையும் பார்த்தார்கள்.

4. அவர்கள் குட்டியின்மீது மனமிரங்கி, அதை வெளியே எடுத்துவிட விரும்பினார்கள். ஒருவன் ஓடிப்போய் ஒரு கூடையைக் கொண்டு வந்தான். அவர்கள் அதைக் கயிற்றில் கட்டி, தாய்ப் பூனையை அதில் வைத்துக் கிணற்றில் இறக்கினார்கள்.



5. கூடை, குட்டி இருக்கும் இடம் போனதும், தாய்ப்பூனை குட்டியைக் கௌவி எடுத்து

அதில் வைத்தது. உடனே சிறுவர்கள் கூடையை மேலே இழுத்துப் பூனையையும் குட்டியையும் வெளியே விட்டார்கள்.



6. குட்டி உயிர் பிழைத்ததற்குப் பூனை சந்தோஷப்பட்டது. சிறுவர்கள் செய்த உபகாரத்திற்காக அது அவர்களை வாழ்த்தியது; பிறகு குட்டியுடன் தன் இருப்பிடம் சென்றது.

பயிற்சி :

1. பூனைக்குட்டி ஏன் கிணற்றுக்குள் விழுந்தது ?
2. அது கிணற்றில் இருப்பது பூனைக்கு எப்படித் தெரிந்தது ?
3. குட்டியைக் காப்பாற்றச் சிறுவர்கள் என்ன உபாயம் செய்தார்கள் ?
4. பூனை சிறுவர்களை ஏன் வாழ்த்தியது ?
5. இக்கதையைத் தாய்ப்பூனை சொல்லுவது போலச் சொல்லு.

5. சிங்கமும் சுண்டெலியும்



ஒரு சிங்கம் காட்டில் அயர்ந்து தூங்கிக்கொண்டு இருந்தது. சுண்டெலி ஒன்று, தெரியாமல் அதன் மீது ஓடி விளையாடிற்று. அதனால், சிங்கம் தூக்கம் கெட்டு, கோபத்துடன் பார்த்தது.

சிங்கம் : அடா அற்பப்பயலே, உனக்கு என்ன தைரியம்! இதோ உன்னைக் கொல்லுகிறேன், பார்!

சுண்டெலி : (நடுங்கிக்கொண்டு) மிருகேந்திரரே, நான் அறியாமல் செய்த குற்றத்திற்கு என்னை மன்னியுங்கள். இந்த நன்றியை நான் மறக்க மாட்டேன். சமயம் வந்தால், நானும் தங்களுக்கு உபகாரம் செய்வேன்.

சிங்கம் : அடே அற்பா, இதோ உயிர்ப்பிச்சை கொடுத்தேன். பிழைத்துப் போ. நீ என்ன உபகாரம் எனக்குச் செய்யக் கூடும்!

சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் சிங்கம் காட்டில் வேட்டைக்குச் சென்றது; அங்கு வேடன் கட்டியிருந்த வலையில் தெரியாமல் சிக்கிக்கொண்டது.

வலையை அறுத்துக்கொண்டு தப்பச் சிங்கம் ஆனமட்டும் பார்த்தது. அது முடியவில்லை. உடனே அது காடெங்கும் கேட்கும்படி பயங்கரமாகக் கர்ச்சித்தது.

சிங்கத்தின் கர்ச்சனை சுண்டெலியின் காதில் விழுந்தது. சிங்கத்திற்கு ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறது என்று எண்ணிச் சுண்டெலி சத்தம் வரும் இடம் நோக்கி ஓடியது.



சிங்கம் வலையில் சிக்கிக் கிடப்பதை அது பார்த்தது; உடனே அது தன் கூரிய பற்களால்

வலையைத் துண்டு துண்டாகக் கடித்துச் சிங்கத்தை விடுவித்தது.

சிங்கம்: நண்பா, உன் குணத்தை அறியாமல் நான் உன்னை இகழ்ந்தேன். நீ என்னை மன்னிக்க வேண்டும். நீ இல்லாவிடில் இப்பொழுது நான் இறந்திருப்பேன்.

சுண்டெலி: மிருகேந்திரரே, நான் ஒன்றும் பிரமாதமாகச் செய்யவில்லையே! ஆபத்தில் இருப்பவரைக் காப்பது நம் கடமைதானே!

இதிலிருந்து சிங்கம் மற்ற மிருகங்களைக் கொல்வதையே நிறுத்திவிட்டது.

பயிற்சி:

1. சுண்டெலியின்மீது சிங்கம் ஏன் கோபித்தது?
2. சுண்டெலி உபகாரம் செய்வதாகச் சொன்னதைச் சிங்கம் ஏன் இகழ்ந்தது?
3. சுண்டெலி சிங்கத்திற்கு எவ்விதம் உபகாரம் செய்தது?
4. அதைப்பற்றிச் சுண்டெலி என்ன சொன்னது?
5. இக்கதையைச் சிங்கமும் சுண்டெலியும் தனித்தனி சொல்லுவது போலச் சொல்லு.

6. யார் உயர்ந்தவர் ?



ஒரு குடியானவன் பட்டியில் இருந்த பசு, ஆடு, குதிரை, கோழி ஆகிய இவையெல்லாம் ஒரு நாள் ஒன்றோடு ஒன்று சண்டையிட ஆரம்பித்தன. ஒவ்வொன்றும் தானே உயர்ந்தது என்று வாதம் செய்தது.

பசு : குடியானவன் குடும்பத்திற்கு வேண்டிய பாலை நானே கொடுக்கிறேன். ஆகையால், நானே உயர்ந்தவன்.

ஆடு : நான் ரோமம் கொடாவிட்டால், குடியானவனுக்குக் கம்பளம் எப்படிக் கிடைக்கும்? ஆகையால், நானே உயர்ந்தவன்.

குதிரை: மனிதரை வேண்டுமிடத்திற்கு நான் அல்லவா சுமந்து செல்கிறேன் ? ஆகையால், நானே உயர்ந்தவன்.

கோழி: மனிதர்களுக்குத் தினந்தோறும் உண்ண முட்டை கொடுப்பது யார்? ஆகையால்,நானல்லவா எல்லாரினும் உயர்ந்தவன்?

அவை இப்படிச் சண்டையிட்டதை அருகிலுள்ள மரத்திலிருந்த ஆந்தை ஒன்று கேட்டுக் கொண்டிருந்தது.

ஆந்தை: நீங்கள் ஏன் வீண் சண்டை செய்கிறீர்கள்? நானும் குடியானவன் வயலில் தானியக் கதிர்களைக் கொறிக்கும் எலிகளைக் கொல்லுகிறேன். நாம் ஒவ்வொருவரும் நம் வேலையைச் செய்து குடியானவனுக்கு உதவுகிறோம். குடியானவனும் நம்மைப் போலவே உழைத்துத் தன் வேலையைச் செய்து நமக்கு உதவுகிறான். ஆகையால், நம்முள் உயர்வு தாழ்வு கூறுவது எப்படி? நாம் எல்லாரும் ஒற்றுமையாய் இருந்து வாழ்வதுதான் உயர்வு.

இதைக் கேட்டபின் எல்லாம் சண்டை செய்வதை விட்டு ஒற்றுமையாய் வாழ்ந்தன.

பயிற்சி :

1. குடியானவன் பட்டியிலிருந்த பிராணிகள் எதற்காகச் சண்டை செய்தன ?

2. ஒவ்வொன்றும் தானே உயர்ந்தது என்பதற்கு என்ன காரணம் சொல்லிற்று ?

3. ஆந்தை எப்படிக் குடியானவனுக்கு உதவுகிறது ?

4. ஆந்தை மற்றப் பிராணிகளுக்குச் சொன்ன புத்தி மதிகள் யாவை ?

5. இந்தக் கதையை ஆந்தை சொல்லுவது போலச் சொல்லு.

குறிப்பு:—இக்கதையை ஆசிரியர் பிள்ளைகளைக்கொண்டே நடிக்கச் செய்யலாம்.

7. ஓநாயும் குழி முயலும்



ஒரு நாள் ஒரு ஓநாய்மீது ஒரு பெரிய பாறை விழுந்துவிட்டது. ஓநாய் அதை அப்புறப்படுத்தும்படி அவ்வழியே சென்ற குழி முயல் ஒன்றை வேண்டியது. குழி முயல் மனம் இரங்கிப் பாறையை அப்புறப்படுத்தியது.

உடனே ஓநாய் குழி முயலின்மீது பாய்ந்து, அதைப் பிடித்துக்கொண்டது.

குழி முயல்: நான் உனக்கு உபகாரம் செய்தேனே! என்னை நீ கொல்லலாமா ?

ஓநாய்: இதில் என்ன தப்பு ?

குழி முயல்: என்ன தப்பா ? யாரைக் கேட்டாலும் இது சரியன்று என்று சொல்லுவார்களே !

ஓநாய்: அப்படியா! கேட்போம், வா.

இரண்டும் சிறிது தூரம் போயின; வழியில் ஒரு நரியைச் சந்தித்தன.

ஓநாய் : நரி அண்ணே, நான் இந்தக் குழிமுயலை மலை அடியில் பிடித்தேன். இதைக் கொன்று தின்பது தப்பா?

குழி முயல்: இல்லை, நரியாரே! இதன்மீது விழுந்து கிடந்த பாறையை அப்புறப்படுத்தி நான் இதைக் காப்பாற்றினேன். இது என்னைக் கொன்று தின்பது நியாயமா?

நரி: உங்கள் வழக்கு எனக்குச் சரியாக விளங்கவில்லை. ஆகையால், நாம் அந்த இடத்திற்குப் போவோம்; வாருங்கள்.

மூன்றும் சேர்ந்து பாறை கிடக்கும் இடத்திற்குப் போயின.

குழி முயல்: இந்தப் பாறையைத்தான் ஐயா, நான் அப்புறப்படுத்தி ஓநாயைக் காப்பாற்றினேன்.

நரி: அது எப்படி? எனக்கு விளங்கவில்லையே! ஓநாயே, நீ படுத்துக்கொள். குழி முயலே, இப்

போது பாறையை முன் இருந்தது போலவே வை பார்ப்போம்.

குழி முயல் நரி சொன்னபடியே பாறையைப் புரட்டி ஓநாயின்மீது வைத்தது,

ஓநாய் : இப்போது தெரிந்ததா, நரி அண்ணே? இதற்கு நீ என்ன சொல்லுகிறாய்?

நரி : நாங்கள் வீடு போகிறோம். நீ இப்படியே இரு.

பாரம் தாங்காமல் வருந்தி ஓநாய் கடைசியில் இறந்தது.

பயிற்சி :

1. ஓநாய் செய்தது சரியன்று என்று குழி முயல் ஏன் சொல்லிற்று?
2. குழி முயலைக் காப்பாற்ற நரி என்ன தந்திரம் செய்தது?
3. ஓநாயைக் கொல்லாமல் வழக்கைத் தீர்க்க என்ன செய்திருக்கலாம்?
4. இந்தக் கதையைக் குழி முயல் சொல்லுவது போலச் சொல்லு.

8. கர்வத்தால் இறந்த கழுதை



1. ஒரு கொட்டிலில் ஒரு கழுதையும் ஒரு சேவலும் தங்கி இருந்தன. அவை இரண்டும் சினேகமாய் வாழ்ந்தன.

2. ஒரு நாள் அவ்வழியே ஒரு சிங்கம் சென்றது. சிங்கம் பசியாயிருந்ததால், கழுதையைக் கொன்று தின்ன எண்ணியது.

3. அச்சமயத்தில் சேவல் கூவிற்று. சேவல் கூவுவதைக் கேட்டால் சிங்கம் பயப்படும். ஆகவே, சிங்கம் அங்கிருந்து ஓட ஆரம்பித்தது.

4. சிங்கம் பயந்து ஓடுவது கழுதைக்கு அதிசயமாய் இருந்தது. உடனே அது கர்வம் கொண்டு சிங்கத்தைத் துரத்திக்கொண்டு ஓடிற்று.

5. சிறிது தூரம் ஓடினதும் சேவல் கூவும் சத்தம் நின்றுவிட்டது. உடனே சிங்கம் திரும்பிப்



பார்த்தது. தான் கொல்ல எண்ணிய கழுதையைக் கண்டதும் சிங்கம் அதன்மீது பாய்ந்து, அதைக் கொன்று தின்றது.

பயிற்சி :

1. கழுதையைக் கொல்ல எண்ணிய சிங்கம் ஏன் ஓட ஆரம்பித்தது ?
2. சிங்கம் ஓடுவதைக் கண்ட கழுதைக்கு என்ன உண்டாயிற்று ? அது என்ன செய்தது ?
3. பயந்து ஓடின சிங்கம் ஏன் திரும்பிப் பார்த்தது ? அது என்ன செய்தது ?
4. சிங்கத்திற்குத் தப்பின கழுதை ஏன் அதற்கு இரையாயிற்று ?
5. இக்கதையைச்சிங்கம் சொல்லுவதுபோலச் சொல்லு.

9. ஒற்றுமையே பலம்.



ஒரு குடியானவனுக்கு மூன்று குமாரர்கள் இருந்தார்கள். அவர்கள் எப்போதும் ஒருவரோ டொருவர் சண்டையிட்டுக்கொண்டே இருந்தார் கள். தகப்பன் எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை.

குடியானவன், தள்ளாத கிழவனானன். அவன் தன் குமாரர்களைப்பற்றி மிகவும் கவலையாயிருந் தான். தனக்குப் பிறகு அவர்களை ஒற்றுமையாக வாழச்செய்வது எப்படி என்ற கவலை அவனுக்கு மிகுதியாய் இருந்தது.

ஒருநாள் அவன் தன் வேலைக்காரனை அழைத்து, சில சுள்ளிகளை ஒரு கட்டாகக் கட்டித் தன்முன்

கொண்டு வந்து வைக்கச் சொன்னான்; பிறகு, தன் குமாரர் மூவரையும் தன் முன் வரவழைத்தான்.

கிழவன் : பிள்ளைகளே, இந்தச் சுள்ளிக்கட்டை உங்களில் ஒவ்வொருவரும் தனித்தனியே ஒடியுங்கள், பார்ப்போம்.

மூத்த மகன் முன் வந்து தன்னாலான மட்டும் முயன்று பார்த்தான். சுள்ளிக்கட்டை ஒடிக்க அவனால் முடியவில்லை. அவனைப் போலவே மற்ற இருவரும் ஒடிக்க முயன்றனர். அவர்களாலும் அதை ஒடிக்க முடியவில்லை.



கிழவன் : பிள்ளைகளே, இப்பொழுது கட்டை அவிழ்த்துவிட்டு ஒவ்வொரு சுள்ளியாக ஒடியுங்கள், பார்ப்போம்.

பிள்ளைகள் : இதோ வெகு சுலபமாய் ஒடித்து விட்டோமே !

கிழவன் : பார்த்தீர்களா ! நீங்களும் சண்டை இடாமல் ஒற்றுமையாய் இருந்தால், உங்களுக்கு ஒரு கஷ்டமும் வாராது; சண்டை இட்டுக் கொண்டு தனித்தனியே இருப்பீர்களானால், கஷ்டமே நேரிடும்.

அதன் பிறகு அந்தப் பிள்ளைகள் சண்டை இடாமல் ஒற்றுமையாய் வாழ்ந்தார்கள். அதைக் கண்ட கிழவன் கவலை நீங்கிச் சந்தோஷமடைந்தான்.

பயிற்சி :

1. கிழவன் கொண்ட கவலைக்குக் காரணமென்ன ?
2. பிள்ளைகளால் சுள்ளிக்கட்டை ஏன் ஒடிக்க முடியவில்லை ?
3. தகப்பன் செய்த தந்திரத்திலிருந்து பிள்ளைகள் கற்றுக்கொண்டது என்ன ?
4. இந்தக் கதையைப் பிள்ளைகளில் ஒருவன் சொல்லுவது போலச் சொல்லு.

10. சேவலும் நரியும்



1. ஒரு சேவல் சுவரின்மீது நின்றுகொண்டிருந்தது. அவ்வழியே நரி ஒன்று போனது. நரிக்குப் பசி அதிகமாய் இருந்தது. அது சேவலைப் பிடித்துத் தின்ன ஆசைப்பட்டது.

2. சேவல் எப்போது கீழே இறங்குமோ என்று நரி பார்த்துக்கொண்டே இருந்தது. சேவல் இறங்கவில்லை.

3. "அண்ணே, க்ஷேமமா?" என்று நரி கேட்டது.

4. "க்ஷேமந்தான்," என்று சேவல் பதில் சொன்னது.

5. "நீ கீழே இறங்கி வந்தால், நாம் சிறிது நேரம் பேசிக்கொண்டிருக்கலாமே!" என்று நரி சொல்லிற்று.

6. "ஐயோ! நான் கீழே இறங்கினால், நீ என்னை அடித்துக் கொன்றுவிடுவாயே!" என்று சேவல் சொன்னது.

7. "இதென்ன! மிருகங்கள் இனி ஓர் உயிர்ப் பிராணியையும் கொல்லுவதில்லை என்று ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பது உனக்குத் தெரியாது போல இருக்கிறதே!" என்று நரி வஞ்சகமாகப் பேசியது.

8. நரியின் வஞ்சகத்தை அறிந்த சேவல், ஒரு பக்கம் பார்ப்பதுபோல நின்றது.

9. "என்ன அண்ணே, நான் சொல்வதைக் கவனிக்காமல் எங்கேயோ பார்த்துக்கொண்டு இருக்கிறாயே!" என்று நரி கேட்டது.

10. "கவனிக்காமல் இல்லை. அதோ அங்கு நமக்குச் சிநேகமான நாய்கள் வேகமாய் இங்கு ஓடி வந்துகொண்டிருக்கின்றன. அவைகளும் இதே செய்தியைத்தான் சொல்ல வருகின்றனவோ என்று பார்த்தேன்," என்று சேவல் பதில் கூறியது.

11. "ஐயோ! நாய்களா வருகின்றன!" எனச் சொல்லிக்கொண்டே நரி ஓட முயன்றது.

12. "ஏன் ஓட முயல்கிறாய்? அவை ஓர் உயிர்ப் பிராணியையும் இனிக் கொல்லாவே!" என்று சேவல் பரிகாசமாய்க் கேட்டது.



13. "இல்லை! இல்லை!! அவற்றுக்கு அந்த ஒப்பந்தம் ஒரு வேளை தெரியாமல் இருக்கலாம்," என்று சொல்லிக்கொண்டே நரி வேகமாய் ஓடிப் போயிற்று.

பயிற்சி :

1. நரி ஏன் சேவலைக் கீழே இறங்கும்படி கேட்டது?
2. அதை இறங்கச் செய்வதற்கு நரி என்ன செய்தது?
3. நரியை ஓட்டச் சேவல் என்ன உபாயம் செய்தது?
4. தான் ஓடுவதற்கு நரி என்ன சமாதானம் சொல்லிற்று?
5. இக்கதையைச் சேவல் சொல்லுவது போலச் சொல்லு.
6. இதை வேறு விதமாக முடித்துச் சொல்லு.

11. சுண்டெலிகளின் கூட்டம்



ஒரு வீட்டில் பல சுண்டெலிகள் இருந்தன. அவ்வீட்டில் ஒரு பூனையும் இருந்தது. அந்தப் பூனை தினந்தோறும் சுண்டெலிகளைப் பிடித்துத் தின்று வந்தது.

பூனைக்குப் பயந்து சுண்டெலிகள் அதிகமாக வெளியே வருவதில்லை. அதனால், அவைகளுக்குத் தீனி கிடைப்பதும் கஷ்டமாயிற்று. ஆகவே, அவைகள் பசியால் வருந்தின. பூனையைத் தொலைப்பதற்கு யோசனை செய்ய அவை கூட்டம் கூடின. ஒரு புத்தியுள்ள சுண்டெலி கூட்டத்தில் தலைமை வகித்தது.

தலைமைச் சுண்டெலி: நண்பர்களே, நாம் கூடியிருக்கும் விஷயம் உங்களுக்குத் தெரியும். நமக்குக்

கஷ்டம் கொடுக்கும் பூனையைத் தொலைக்க யோசனை சொல்லுங்கள்.

முதல் சுண்டெலி : நாம் எல்லாரும் ஒன்றாய்ச் சேர்ந்து பூனையைக் கடித்துக் கொன்றுவிடுவது நலம் என்று நான் எண்ணுகிறேன்.

இரண்டாம் சுண்டெலி : இது ஆகிற காரியமா? பூனை எங்கே, நாம் எங்கே! அது நம்மைக் கண்டதும் பிடித்துக் கொன்றுவிடுமே!

எல்லாச் சுண்டெலிகளும் : ஆம்! ஆம்!! பூனையைக் கொல்வது நம்மால் முடியாத காரியந்தான். இதற்கு வேறு யோசனைதான் செய்ய வேண்டும்.

சிறிது நேரம் சுண்டெலிகள் எல்லாம் ஒன்றை ஒன்று பார்த்து விழித்துக்கொண்டு இருந்தன.

குஞ்சு சுண்டெலி : எனக்கு ஒரு யோசனை தோன்றி இருக்கிறது.

எல்லாச் சுண்டெலிகளும் : அது என்ன? சொல்! சீக்கிரம் சொல்!!

தலைமைச் சுண்டெலி : குஞ்சு எலி தன் யோசனையைச் சொல்லட்டும்.

குஞ்சு சுண்டெலி : தலைவரே, பூனை சத்தம் செய்யாமல் வருவதாலேதான் நாம் அதனிடம் அகப்பட்டுக்கொள்ளுகிறோம்.

எல்லாச் சுண்டெலிகளும்: ஆமாம்! அது நிஜந் தான்! நிஜந்தான்!!

குஞ்சு சுண்டெலி: பூனையின் கழுத்தில் ஒரு மணி யைக் கட்டிவிட்டால், அது வரும்போது சத்தம் கேட்டவுடன் நாம் ஓடிவிடலாம்.

எல்லாச் சுண்டெலிகளும்: பலே! பலே!! இதுவே நல்ல யோசனை! இனி நாம் பூனைக்குப் பயப்பட வேண்டுவதே இல்லை.

கிழச் சுண்டெலி: தலைவரே, நான் ஒரு கேள்வி மட்டும கேட்க விரும்புகிறேன்.



தலைமைச் சுண்டெலி: நீர் அதைக் கேட்கலாம்.

கிழச் சுண்டெலி: யார் பூனைக்கு மணி கட்டுவது?

இதைக் கேட்ட சுண்டெலிகள் எல்லாம் ஒன்றையொன்று பார்த்துக்கொண்டு பேசாமல் இருந்தன.

அப்போது பூனை அங்கு வந்துகொண்டிருந்தது. அதைக் கண்டவுடன் சுண்டெலிகள் எல்லாம் ஓடி ஒளித்துக்கொண்டன.

பயிற்சி :

1. சுண்டெலிகள் ஏன் பசியால் வருந்தின ?
2. முதல் சுண்டெலி என்ன யோசனை சொல்லிற்று ?
3. குஞ்சு சுண்டெலி என்ன யோசனை சொல்லிற்று ?
4. கிழச் சுண்டெலி அதை ஏன் எதிர்த்தது ?
5. இந்தக் கதையைப் பூனை சொல்லுவது போலச் சொல்லு.
6. இதை வேறு விதமாய், ஒரு பையன் சுண்டெலிகளுக்கு உதவி செய்ததாகப் பாவித்து முடி.

குறிப்பு:—ஆசிரியர் இக்கதையைப் பிள்ளைகளைக் கொண்டு நடிக்கச் செய்யலாம்.

12. நாயும் பூனையும்



1. ஒரு நாள் நாய் ஒன்று ஒரு தெரு வழியே போனது. அங்கு ஒரு பக்கத்தில் பூனை ஒன்று உட்கார்ந்திருந்தது. நாய் பூனையைப் பார்த்துவிட்டது.

2. நாய் பூனையைப் பிடிக்க நினைத்து, அது இருக்குமிடம் பாய்ந்து ஓடியது.

3. "நாம் பயந்து ஓடினால், இது நம்மைத் துரத்தும்; தைரியமாய் உட்கார்ந்திருந்தால், இதனால் என்ன செய்ய முடியும்!" என்று எண்ணிப் பூனை தன் கால் நகங்களை நீட்டிக்கொண்டு நகராமல் இருந்தது.

4. "இது என்ன ஆச்சரியம்! பூனை பயந்து ஓடாமல் இருக்கிறதே!" என்று நாய் ஆச்சரியப்

பட்டு நின்றது. பின்னும் பூனை இடம் விட்டு நகராமல் உட்கார்ந்திருந்தது.

5. "இது ஓடினாலல்லவா நாம் இதைத் துரத்தலாம்! நாம் இதன் அருகில் போனால், இது தன் கூரிய நகங்களால் நம்மைப் பிறாண்டிவிடுமே! இதைப் பயம் காட்டி ஓடச்செய்வது எப்படி!" என்று நாய் மேலும் எண்ணிக்கொண்டே நின்றது.

6. அப்போதும் பூனை அசையவில்லை.

7. "சீ! சீ!! இது மந்தமான பூனை. விளையாடுவதற்கும் இது தகுதியற்றது," என்று சொல்லிக் கொண்டு நாய் பூனையை விட்டுவிட்டு ஓடிப் போயிற்று.

பயிற்சி :

1. பூனை ஏன் நாயைக் கண்டு ஓடவில்லை ?
2. நாய் பூனையை ஏன் எதிர்க்கவில்லை ?
3. நாய் என்ன சொல்லிவிட்டு ஓடிப்போயிற்று ?
4. பூனை ஓடியிருந்தால், நாய் அதை என்ன செய்திருக்கும் ?
5. இந்தக் கதையைப் பூனை சொல்வது போலச் சொல்லு.

13. கபடமுள்ள சினேகம்



1. ஒரு காட்டில் ஓர் எருதும் ஒரு சிங்கமும் சினேகமாய் இருந்தன. இரண்டும் இணை பிரியாமல் சேர்ந்து வாழ்ந்து வந்தன.

2. அந்தக் காட்டில் நரி ஒன்று வசித்து வந்தது. அது எப்படியாவது எருதின் மாமிசத்தையும் சிங்கத்தின் மாமிசத்தையும் தின்ன ஆசை கொண்டது.

3. ஒரு நாள் நரி அவை இருக்குமிடம்போய்த் தன்னையும் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டது. அதற்கு எருதும் சிங்கமும் சம்மதித்தன. அது முதல் அவை மூன்றும் சேர்ந்து சினேகமாய் வாழ்ந்து வந்தன.

4. "இவற்றை வஞ்சனையால் கொல்ல முடியுமே அல்லாமல், பலத்தால் கொல்ல முடியாது. அதற்கு ஒரு வழி செய்கிறேன்," என்று நரி தனக்குள்ளே எண்ணியது.

5. ஒரு நாள் நரி, சிங்கம் தனியாயிருக்கும் போது, "மிருகேந்திரரே, அந்த எருதை நம்பா



தீர்கள். அது உங்களைப்பற்றிக் கேவலமாகப் பேசி வருகிறது," என்று சொன்னது.

6. அம்மாதிரியே அது எருதினிடமும் சென்று, சிங்கத்தின்மீது கோபத்தை மூட்டியது.

7. கடைசியில் எருதும் சிங்கமும் ஒன்றை ஒன்று எதிர்த்துச் சண்டை செய்தன. அந்தச் சண்டையில் இரண்டும் இறந்தன.



8. எப்போது சமயம் வாய்க்கும் என்று காத்திருந்த நரி, சந்தோஷமாக அவற்றின் மாமிசத்தைத் தின்றது.

பயிற்சி :

1. நரி எருதோடும் சிங்கத்தோடும் சினேகம் செய்தது ஏன் ?
2. அவற்றைக் கொல்ல நரி செய்த உபாயம் என்ன ?
3. எருதும் சிங்கமும் சண்டை செய்ததற்குக் காரணம் என்ன ?
4. இந்தக் கதையை நரி அவ்விரு மிருகங்களால் கொல்லப்படுவது போல முடி.

14. அரசமரமும் நாணலும்



1. ஓர் ஆற்றங்கரையில் அரசமரம் ஒன்று பருத்து உயரமாய் வளர்ந்திருந்தது. அதன் கரை யோரத்தில் நாணலும் வளர்ந்து நின்றது.

2. காற்று அடிக்கும்போது அரசமரம் வளை யாமலும் அசையாமலும் நிற்கும். நாணலோ, தலை வணங்கி அங்குமிங்கும் அசையும். அதைப் பார்க்கும் போதெல்லாம் அரசமரம் கர்வம் அடையும்.

3. "ஏ நாணலே, சிறு காற்று அடித்தா லும் நீ தலை வணங்கி அங்குமிங்கும் அசைகிறாயே! என்னைப் பார். எந்தக் காற்றுக்கும் நான் அசைகி

றேனு?" என்று அரசமரம் கர்வமாக நாணலை இகழ்ந்து பேசியது.

4. "வீண் பேச்சினுல் என்ன பயன்? காரியத்தில் அல்லவோ பார்க்க வேண்டும்? உண்மையில் உன்னைவிட எனக்கே பலம் அதிகம்," என்று நாணல் தாழ்மையுடன் தெரிவித்தது.

5. இப்படியிருக்கையில், பெரிய புயல் காற்று ஒன்று திடீரெனத் தோன்றிற்று. காற்று வெகு பலமாய் அடித்ததால், அரசமரம் வேரோடு பெயர்ந்து பொத்தெனக் கீழே விழுந்தது. ஆனல், நாணலோ, தலை வணங்கித் தப்பியது.

6. "ஏ, அரசமரமே, இப்பொழுது பார்த்தாயா? உன் வீண் ஜம்பம் என்ன ஆயிற்று?" என்று நாணல் அரசமரத்தைக் கேட்டது.

7. கர்வத்தால் அழிந்த அரசமரம் வெட்கம் அடைந்து, ஒன்றும் பேசாமல் கிடந்தது.

பயிற்சி :

1. இக்கதையின் (1) முதல் பாகம், (2) நடுப் பாகம், (3) கடைப் பாகம் ஆகிய இவற்றைக் குறிப்பிடு.

2. மேற்கூறிய மூன்று பாகங்களுள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்துக் கதையைச் சொல்லு.

3. இக்கதையை நாணல் சொல்லுவதுபோலச் சொல்லு.

4. நீ நாணலைப் போல இருக்க விரும்புகிறாயா? அரச மரத்தைப் போல இருக்க விரும்புகிறாயா? காரணத்துடன் சொல்லு.

15. அரசனும் கிழவனும்



1. ஒரு குடியானவன் தன் தோட்டத்தில் சில தென்னங்கன்றுகளை நட்டுக்கொண்டிருந்தான். அவன் தள்ளாத கிழவன். அப்போது அவ்வழியே அவ்வூர் அரசன் போனான்.

2. "பெரியவரே, நீர் நடும் இந்தக் கன்றுகள் வளர்ந்து பலன் கொடுக்கும் வரை நீர் உயிருடன் இருக்கப் போகிறீரா? நீர் ஏன் கஷ்டப்பட்டு இவற்றை நட்டு வளர்க்க வேண்டும்?" என அரசன் கிழவனைக் கேட்டான்.

3. "அரசரே, நீங்கள் சொல்வது உண்மையே. இக்கன்றுகள் பலன் கொடுப்பதற்கு முன் நான் இறந்துவிடுவேன்," என்று கிழவன் வணங்கிப் பதில் சொல்ல ஆரம்பித்தான.

4. "அப்படியிருக்க, நீர் ஏன் இவற்றைக் கஷ்டப்பட்டு நட்டு வளர்க்க வேண்டும்?" என்று அரசன் குறுக்கிட்டு மறுபடியும் கேட்டான்.

5. "வேந்தரே, நான் இப்போது பயன் அனுபவிக்கும் மரங்களை எனக்கு முன் வாழ்ந்தவர்கள் வைத்துவிட்டுப் போனார்கள். அவை சீக்கிரத்தில்

பட்டுப்போகும். அதனால், எனக்குப் பின் வருபவர்களுக்காக நான் இவற்றை நட்டு வளர்க்கிறேன்," என்று கிழவன் சொன்னான்.

6. இதைக் கேட்ட மன்னன், கிழவனைப் புகழ்ந்து பேசி, அவனுக்குப் பெரும் பரிசும் கொடுத்தான்.

பயிற்சி :

1. இக்கதையின் நடுப்பாகத்தை மூன்று வாக்கியங்களில் சொல்லு.
2. அரசன் கிழவனைப் புகழ்ந்ததற்குக் காரணம் என்ன?
3. நாம் இப்பொழுது அனுபவிக்கும் சுகங்களுக்குக் காரணமாயிருந்தவர் யார் ?
4. நமது கடமை யாது ?

குறிப்பு;—இதை இருவர் நடித்தும் காட்டலாம்.

2775

2175